பொதுமக்களுக்கு நம்பிக்கை அளித்து 'டெபாசிட்' பெற்று - பொதுமக்களை

ஏமாற்றிய நிறுவனங்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொடுப்பதில் கழக அரசு தீவிரம்!

சட்டப்பேரவையில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம்!

சென்னை, ஏப்.29-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், நேற்று காவல் துறை மானியக் கோரிக்கையின் போது சட்டமன்ற உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா பேசியதற்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறுக்கிட்டு அளித்த பதில் வருமாறு :-

நம்முடைய உறுப்பினர் பேராசிரியர் ஜவாஹிருல்லா அவர்கள் உரையாற்றுகிறபோது deposit பெற்று பொதுமக்களை ஏமாற்றுவோர்மீது கடும் நடவடிக்கையை எந்தளவிற்கு எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்ற வினாவை எழுப்பியிருக்கிறார். அதற்காக ஒரு விளக்கத்தை நான் சொல்ல விரும்பு கிறேன். அதற்காக தீவிர விழிப்புணர்வுப் பிரச்சாரத்தைத் தொடர்ந்து நடத்தி பொதுமக்கள், ஏற்கெனவே ஏமாந்திருக்கக் கூடிய பொதுமக்கள் இன்னும் அவர்கள் விழிப்புணர்வுகூட ஏற்படாமல் இன்னும் ஏமாந்து கொண்டிருக்கிறார்களே என்ற வருத்தத்தோடு சுட்டிக்காட்டும் அதேநேரத்தில், நமது அரசால் பெருமளவில் அதைக் கட்டுப்படுத்தி ஓரளவிற்குக் குறைத்திருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

டெபாசிட் பெற்று பொது மக்களை ஏமாற்றியுள்ள நிறுவனங்களைப் பொறுத்தமட்டில், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் ஐந்து ஆண்டுகளில் 97 கோடியே 41 இலட்சம் ரூபாய் மீட்கப்பட்டு டெபாசிட்தாரர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு நான்கு ஆண்டுகளிலேயே 102 கோடியே 96 இலட்சம் ரூபாய் டெபாசிட்தாரர்களுக்கு திருப்பி கொடுக்கப்பட்டிருக்கிறது. அ.தி.மு.க. ஆட்சியில் ஏமாற்றிய நிறுவனங்களின் 854 கோடியே 74 இலட்சம் ரூபாய் சொத்துகள் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால், தி.மு.க. ஆட்சியில் 2,670 கோடியே 89 இலட்சம் மதிப்புள்ள சொத்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அடையாளம் காணப்பட்ட சொத்துக்களை முடக்கும் அரசு ஆணைகள் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 53. ஆனால், கழக ஆட்சியில் 108 அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல; அ.தி.மு.க. ஆட்சியில் 103 கோடியே 24 இலட்சம் ரூபாய் சொத்துகள் மட்டுமே attach செய்யப்பட்ட நிலையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பொதுமக்களை ஏமாற்றிய நிறுவனங்களின் 319 கோடியே 29 இலட்சம் ரூபாய் சொத்துகள் attach செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, பொதுமக்களுக்கு நம்பிக்கை அளித்து deposit பெற்று ஏமாற்றியிருக்கக்கூடிய நிறுவனங்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொடுக்க இந்த அரசு முன்பிருந்த அ.தி.மு.க. அரசைவிட தீவிரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் உறுப்பினருக்குச் சுட்டிக்காட்டுகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்.

தி.மு.க. இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய-நகர-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தென்காசி வடக்கு மற்றும் சேலம் மேற்கு ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய-நகர-பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

நாள்	நேரம்	கழக மாவட்டம்	இடம்
01.05.2025 வியாழக்கிழமை	காலை 9.00 மணி	தென்காசி வடக்கு	மாவட்டக் கழக அலுவலகம், ரயில்வே பீடர் ரோடு, சங்கரன்கோவில்.
02.05.2025 வெள்ளிக்கிழமை	காலை 9.00 மணி	சேலம் மேற்கு	ஸ்ரீ வாசுதேவ் மஹால், சங்ககிரி.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 28-04-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டம்:

உயர் இரத்த அழுத்தம் - நீரழிவு நோய் பாதிப்பு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது!

கணக்கெடுப்பின் முடிவு குறித்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஏப்.29-

மக்களை தேடி மருத்துவம் திட்டம் தமிழ்நாட்டில் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய்களின் பாதிப்புகளை கட்டுப்படுத்துகிறது என்ற கணக்கெடுப்பின் முடிவு குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

மருத்துவச் சேவைகளை மட்டுமல்ல, அதன் வழியே சிறப்பான முடிவுகளையும் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் அளிக்கிறது.

உயர் இரத்த அழுத்தத்தை 17 விழுக்காடும், நீரிழிவு நோயை 16.7 விழுக்காடும் கட்டுப்படுத்திப் பொது மருத்துவச் சேவையின் வெற்றிக்கான அலகுகோலை மாற்றியமைத்து வருகிறது.

மக்கள் மருத்துவமனைகளைத் தேடி வருவதற்காகக் காத்திராமல், மக்களின் வீடுகளை நாடிச் சென்று ஈட்டிய வெற்றி இது! இந்தியா முழுவதும் பொதுமருத்துவச் சேவைக்கான 'மாதிரி'யாக இது மாறியுள்ளது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் கூறியுள்ளார்.

திருவண்ணாமலை - போளூர் - துளுவ புஷ்பகிரியில்

அரசு நிதியுதவி பெறும் தொடக்கப் பள்ளியை அரசே ஏற்று நடத்தும்!

சட்டப்பேரவையில் கவனஈர்ப்பில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தகவல்!

சென்னை, ஏப். 29 -

சட்டப்பேரவையில் உறுப்பினர் கொண்டு வந்த கவன ஈர்ப்பில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதிலளிக்கையில் அரசு நிதியுதவி பெறும் தொடக்கப் பள்ளியை அரசுப் பள்ளியாக ஈர்த்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் அக்ரி. எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, திருவண்ணாமலை மாவட்டம் போளூர் ஊராட்சி ஒன்றியம், துளுவ புஷ்பகிரி கிராமம், அரசு நிதியுதவி பெறும் தொடக்கப் பள்ளியை அரசே ஏற்று நடத்த வேண்டியது குறித்து கவனஈர்ப்பு கொண்டு வந்து பேசினார்.

இந்த கவனஈர்ப்பில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விளக்க மளித்து பேசியதாவது:-

முன்னாள் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர் அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய இந்தக் கோரிக்கை குறித்து almost இதன் விவரங்களை பற்றியெல்லாம் தெரிவித்துவிட்டார்கள். எனவே, அதனை நான் repeat செய்யாமல், என்ன நாங்கள் முடிவு எடுத்திருக்கிறோம் என்பதை மட்டும் சொல்கிறேன். ஏனென்றால், அரசாணை எண் 2010ஐப் பற்றி சொல்லியிருக்கிறார்கள்; அரசாணை எண் 85ஐப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். அதனால் என்னென்ன விதிமுறைகள், 40 வருடங்களாக அந்தப் பள்ளி எப்படி செயல்பட்டது என்பதைப் பற்றி சொல்லியிருக்கிறீர்கள்.

எனவே, அதனை மீண்டும் நான் repeat செய்யாமல், இப்பள்ளி கடந்த 40 ஆண்டுகளாக நிர்வாகி இல்லாத நிலையிலும், இப்பள்ளிக்கு எந்தவிதமான கூடுதல் வசதிகளும் நிர்வாகத்தால் ஏற்படுத்தப்படாத நிலையிலும், நேரடி மானியத்தில் செயல்பட்டு வருவதை கருத்தில் கொண்டு, அரசாணை எண் 2010 மற்றும் அரசாணை எண் 85, பள்ளிக் கல்வித் துறை நாள் 15.4.2008ன்படியும் தகுந்த கருத்துருக்கள் பெறப்பட்டு, சிறப்பு நிகழ்வாக கருதி, திருவண்ணாமலை மாவட்டம், போளூர் ஒன்றியம், துளுவ புஷ்பகிரி கிராமத்திலுள்ள அரசு நிதியுதவி பெறும் தொடக்கப் பள்ளியானது, அரசுப் பள்ளியாக ஈர்த்துக்கொள்ளப்படும் என்பதை தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கட்டடங்கள் கட்டித் தருவது பற்றி கேட்டிருக்கிறீர்கள். இந்த ஆண்டும் நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் ரூ.1,000 கோடி அதற்காக தனியாக ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதில் கண்டிப்பாக நீங்கள் சொல்கின்ற அந்தப் பள்ளிக் கூடத்திற்கான கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதிலளித்தார்.

8 லட்சம் அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிய முதல்வருக்கு நன்றி!

சட்டப்பேரவையில் - அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் பேச்சு!

சென்னை, ஏப்.29-

சட்டப்பேரவையில் நேற்று, முதல்வர் அவர்கள் வெளியிட்ட 110 அறிவிப்பினைத் தொடர்ந்து பேசிய அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ், "சுமார் 8 லட்சம் அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிய முதல்வருக்கு நன்றி" என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:-

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கைகளை ஏற்று சுமார் எட்டு இலட்சம் அரசு ஊழியர்கள் அரசின் திட்டங்களை மக்களுக்கு கொண்டு சேர்க்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று ஈட்டிய விடுப்பை சரண் செய்வது 1.10.2025 முதல் பெற்றுக்கொள்ளலாம் என்றும், அகவிலைப்படி இரண்டு சதவீதம் உயர்த்தியும், கல்வி முன்பணம், திருமண முன்பணம், ஓய்வூதியதாரர்களுக்கான தொகையை உயர்த்தியும், குறிப்பாக மகளிருக்கு அவர்களுடைய தகுதி காண் பருவத்தை முடித்து அவர்களுடைய முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்த முதலமைச்சர் அவர்களுக்கு மனிதவள மேலாண்மைத் துறை சார்பாக எனது பணிவார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

வேந்தராக முதல்வர் மு.க.ஸ்டாலின் இருப்பார்

கும்பகோணத்தில் 'கலைஞர் பல்கலைக்கழகம்'!

பேரவையில் சட்ட மசோதா - அமைச்சர் கோவி. செழியன் தாக்கல்!

சென்னை, ஏப்.29-

சட்டப்பேரவையில் கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம் கும்பகோணத்தில் அமைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து பேரவையில் கலைஞர் பல்கலைக்கழகத்துக்கான சட்ட முன்வடிவை உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் தாக்கல் செய்தார்.

நோக்கக் காரண விளக்கங்களை அமைச்சர் கோவி. செழியன் அறிவித்தார்.

முதலமைச்சர் அவர்கள் 24.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், கும்பகோணத்தில் "கலைஞர் பல்கலைக் கழகம்" என்ற பெயரில் ஒரு புதிய பல்கலைக்கழகம் நிறுவப்படும் என்று அறிவிப்பினை வெளியிட்டார்.

தமிழ்நாடு மாநிலத்தில் அரியலூர், கரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருவாரூர் ஆகிய எட்டு மாவட்டங்களை உள்ளடக்கிய மாநிலத்தின் பெரும் பகுதிகளை கொண்ட ஒரே மாநிலப் பல்கலைக்கழகம்

பாரதிதாசன் பல்கலைக்கழகமாகும்.

குறிப்பாக டெல்டா மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளில் உள்ள மாணவர்களின் தேவைகளை நிறைவு செய்வதில் பல்கலைக்கழகம் கடினப்படுகிறது. மேலும் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரிடையே அதிகரித்து வரும் உயர்கல்வித் தேவைகளை நிறைவு செய்வதற்கும், இளைஞர்களின் குறிப்பாக டெல்டா பகுதியைச் சேர்ந்த பின்தங்கிய பின்னணியிலிருந்து வரும் இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவும், உயர்கல்வி நிறுவனங்களில் நுழைவதற்கும், கூறப்பட்ட பகுதியில் மொத்த சேர்க்கை விகிதத்தை அதிகரிப்பதற்கும், புதிய பல்கலைக்கழகத்தை நிறுவுவது இன்றியமையாததாகும்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் - கே.எஸ்.ரவிச்சந்திரன் தலைமையில்

எழும்பூர் தொகுதியில் இறையாண்மை காக்கும் தமிழண்மை! மாபெரும் புகழரங்கம்!

அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல்தியாகராஜன் - நடிகர்கள் தியாகராஜன் - யோகிபாபு - அறந்தாங்கி நிஷா சிறப்புரை

சென்னை, ஏப். 29 - சென்னை கிழக்கு மாவட்டம், திமுக சார்பில், கழக தலைவர் 72 வது பிறந்தநாள் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு மாபெரும் புகழரங்கம் - அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல்தியாகராஜன், நடிகர் தியாகராஜன், நடிகர் யோகிபாபு, நடிகை அறந்தாங்கி நிஷா ஆகியோர் புகழுரைக்கின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 70, இறையாண்மை காக்கும் தமிழண்மை! இவரால் அடைந்தது நம் மேன்மை!! எனும் தலைப்பில் எழும்பூர் வடக்கு பகுதியில், மாபெரும் புகழரங்கம் இன்று 29.04.2025 செவ்வாய் கிழமை அன்று மாலை 6 மணியளவில், சென்னை, சூளை, அங்காளம்மன் கோயில் தெரு அருகில் நடைபெறுகிறது. இந்நலத் திட்ட விழாவில், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன் தலைமை வகிக்கிறார். மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சொ.வேலு எம்சி, வி.சு தாகர், கோ.ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், புனிதவதிஎத்திராசன் எம்.சி, கோ.மணி, புரசை ஜி.தாமாதேரன், பரிதிஇளம்சுருதி எம்.சி, இராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, க.நந்தீஸ்வரன், அ.நிர்மலா தேவி, எல்.சுந்தர்ராஜன் எம்.சி, க. வினோத், கே. கோகுல், எம்.தில்லைகுமார், பி.சி.சம்பத்குமார், ஜெ. கே.கருணாகரன், கே.வள்ளி, சூளை.சுப்பராயலு, சி.தயாளன், வி.அபாய், ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர் முன்னிலை வகிக்கின்றனர்.

என்.மனோகரன், ம. ராஜேந்திரன், வே.மோகன், வி.ஜான்சி, எஸ்.ராஜேந்திரன், சி.குணசேகரன், சி. தமிழ்செ ல்வன், ப.பன்னீர் செல்வம், எம்.பாலாஜி, பா. லோகேஷ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இப்புகழரங்கத்தில் தகவல் தொழில்நுட்பவியல் (ம) டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல்தியாகராஜன், நடிகர் தியாகராஜன், நடிகர் யோகிபாபு, நடிகை அறந்தாங்கி நிஷா ஆகியோர் புகழுரைக்கின்றனர்.

விழாவில், மேயர் ஆர். பிரியாராஜன், தயாநிதிமாறன் எம்.சி, எம்.எல்.ஏ.க்கள் இ.பரந்தாமன், ப.தாயகம்கவி, ஜோசப்சாமுவேல், அ.வெற்றிஅழகன் மற்றும் பி.எம்.யாழினி, ப.ரங்கநாதன், ஓ.ஏ.நாகலிங்கம், கே.எஸ். இரவிச்சந்திரன் பி.கே.மூர்த்தி எம்.சி, எஸ். மணிமுடி, தமிழன்பிரசன்னா, வே.உமாகாந்த், சங்கரிகாராயணன், பி.கே. மூர்த்தி கே.சந்துரு, சி.மகேஷ் குமார். எம்.விஜயகுமார் என்.பி.எம். ஷேக்அப்துல்லா கவிஞர் நன்மாறன் எல்பிஎப் வரதன் தேவஜவகர் ஜி.எம். தேவன் இசட்ஆசாத் சரிதாம கேஷ்குமார் ஸ்ரீராமலு கூ.பி. ஜெயின். டாக்டர் வி.சாந்தகுமாரி. ஐசிஎஃப் வ.முரளிதரன் எ.நாகராஜன். டி.எஸ்.பி. இராஜகோபால், ஆர்.நாகராஜ்.வே வாசு செ.தமிழ்வேந்தன் எம்.சாமிக்கண்ணு எஸ். இராஜசேகர் எஸ்.முரளி எஸ். பன்னீர்செல்வம் டி.வி.செம்மொழி ஐயன் பி.உதயசங்கர் பி.ஜே.துளசிங்கம் வி.ரமேஷ் (எ)நீலகண்டன் சாவித்திரிவீரராகவன் எம்.இப்ராஹிம் கனி டாக்டர் ஏ.பி.பூர்ணிமா. இரா.கலைச்செல்வி வானவில்லிலும் ஜெ.பாலமுருகன் பா.ஜெகதீஷ் ஜி.ஜெ.பிரபு எஸ்.தனசேகர் ஆர்.சங்கர் கானா சுதாதீன தயாளன், ஜி.வி.நாகவள்ளி, நா. துலுக்காணம் என்பிளஃப் மோகன் துரைக்கண்ணன் பி. விஜயகுமார் எம்.பெரோஸ்கான் எம். வினாயகம், ம.அசோக்குமார் எஸ்.சம்பத்குமார் கூ.ராஜ்முகமது, க.கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம் இரா.வீரமணி, க.பா.பிரதீப்குமார், டி.வி. வேலு எம்.மலர்மாறன் கே. அன்னபூரணி எஸ்.ஜெகதீசன், எழுப்பூர் வி.விஜயகுமார் ஆர்.பாபு டால்பின் எஸ். ஹரி, இ.மொய்தின் வான்மதிகதிரவன், முரளிதரன் இரா. ஜெயசங்கரன்

த.செபஸ்டின் மா.காந்தி ஏ.கமலக்கண்ணன் சிருஷ்ன் டி.கே.விஜயரால் எல்ஐசி டி.கர்ணா, எஸ்.நாராயணன் ஆர்.சித்யராஜ் எஸ்.ராஜதுரை து.காரிமுத்து கண்இளங்கோ எஸ்.துலுக்காணம் மு.ஜெயகுமார், எம்.ரமேஷ் ஆர்.ஸ்ரீதர் உவெற்றிவீரன் எம்.ஜி.செல்லம் ஜெபால் மோகன் எம்.ஜி.எஸ்.செந்தில் குமார் மா.ஸ்டாலின் எஸ். பிரவின்குமார் .ஆர்.அஷ் வந்த்குமார் எ.வி. யோகேஷ்ாளி எம்.மதிவாணன் முத்துரவிச்சந்திரன் புரசை.சதீஷ் புராச.ரவி அ ளி த் ச ர வ ண ன் ஜி.காண்டீபன் எ.சரவணன் வி.தயாசங்கவி.ஜெயசூர்யா எஸ்.ஜான்சிராணி எம்.சசினா பேகம் ஆர்னியழகன் சி.தயா பிரசாத் அருமுகம் தென்மாறன் சந்தோஷ் குமார் என். பி.செல்வம் கா. மோகன்குமார் சு.சகன்யா தெற்கு எம். பி.குணசேகரன் டாக்டர் வடவெற்றிகுமார் எட்வின் ஆக்சூர்பாகு எம்.வெற்றிவேலன் எஸ்.முத்துஇப்ராஹிம் விஜய்ராதாகிருஷ்ணன் எஸ். பாலாஜி எம்.முத்து அ.தங்கசெல்லம் உசிருஷ்ணன் கே. ஜெயக்குமார் என்.ராஜேஷ் தார் அரம்பாண்டியன் ஜெ.தேவகிருபை ரா.மணி கண்டன் ஜகார்த்திகேயன் ஜெ.நவீன் குமார் ந. பிரித்விராஜ் மா.மதியழகன்

கூ.ராஜ்குமார் எஸ். செல்வி ஜெயக்குமார் வி.பி. கோட்டி ம.விஜயகுமார் த.முனீஸ்குமார் வழக்கறிஞர் சந்துரு இ.பி.ரமேஷ் மு. மேகலா ர.ராமச்சந்திரன் சே.பாஜாஜி ரா.கோலி ஆமுகமதுவேக்மரிக் கடலைசெல் வன்உசந்தியாடு .ஞானதில் எ.சுகந்தி எ.முனிவேல் சி.பிரியதர், இ.பி.கார்த்திக் என். ஜெ. மதன்குமார் ஆ.அவித்குமார் (எ) ஜெபா ஏ.ஆர்.காசர் பி.டில்கணேஷ் ரா.கார்த்திக் பாசங்கள் ஐசூர்யா .அவினாஷ் கோ.சந்தோஷ்குமார் மு.முகமதுபிலால் ஜோ.சுகுமாறன் ஜெ.சிலம்பரசன் ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

ந.பாலு, சு.மனோகர் நன்றி கூறுகின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்டம், அம்பத்தூர் கிழக்கு பகுதி சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு மனிதநேயம்-54 அன்பே அகத்தின் ஊடகம்! அதுவே முதல்வரின் வாசகம்!! எனும் தலைப்பில் 27.4.2025, திங்கட்கிழமை மாலை: 6.00 மணி அளவில் சென்னை பெரம்பூர் மான்போர்ட் பள்ளி வளாகத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் மாவட்ட துணைச் செயலாளர் புனிதவதி எத்திராஜன் எம்.சி. தலைமையில் நடைபெற்ற மாபெரும் புகழரங்கத்தில் இந்து குழுமம் இந்து என்.ராம் மூத்த பத்திரிகையாளர் பாலகிருஷ்ணன், எழுத்தாளர் சூர்யா, சேவியர் பத்திரிகையாளர் சுகுணா திவாகர் ஆகியோர் புகழ் உரைத்தனர். இவ்விழாவில் மேயர் பிரியா ராஜன், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ப.தாயகம் கவி, பகுதி கழகச் செயலாளர்கள் செ.தமிழ்வேந்தன், எம்.சாமி கண்ணு, இசட்.ஆசாத் எம்.சி., சரிதா மகேஷ் குமார் எம்.சி., வானவில் விஜய், லயன் பி.உதயசங்கர், எம்.பெரோஸ் கான், கா.ராஜ்முகமது, இரா. வீரமணி, எம்.சரவணன் எம்.சி., பெரம்பூர் ஆர் ராஜன், வட்டச் செயலாளர் எஸ்.புஷ்பராஜ், ஜெ.கிருஷ்ணகுமார், இரா.டீக்கா, எம்.இஸட்.அபாய் சுரேஷ்குமார் என்ற பொல்லு சுரேஷ், எம் தமீம் பாய் , எஸ் வெங்கடேசன், எஸ் சசிகுமார்,விகே வெங்கடேசன் மற்றும் கழகத் தோழர்கள் செயல்வீரர்கள் திரளாக கலந்து கொண்டனர். வட்டக் கழகச் செயலாளர்கள் பரிமளா சுரேஷ்பாபு..மா ருத்ரமூர்த்தி நன்றி கூறினர்.